**பூமியை மீட்க வராக மூர்த்திக்கு உதவியவள் ஸ்ரீ வராஹி தேவி**

திருமாலின் மூன்றாம் அவதாரம் வராக அவதாரம் ஆகும். இரணியனின் தம்பியான் இரண்யாட்சன் என்னும் அசுரன் பூமியையே கவர்ந்து பாதாள உலகத்தில் கொண்டு போய் பதுக்கி வைத்து சகல ஜீவராசிகளை இம்சித்தான். காக்கும் கடவுளான திருமாலிடம் தேவர்கள் முறையிட்டார்கள்.
பூமியை மீட்க திருமாலோ பிரம்மாவின் நாசியில் (மூக்கில்) இருந்து ஒரு கட்டை விரல் அளவேயான ஒரு வராகம் (பன்றியாக) வெளிப்பட்டது உருவெடுத்து எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்பொழுதே அந்தச் சிறிய பன்றி உருவம் பூதாகரமாக யானை அளவு வளர்ந்தது. அதைப் பார்த்து பிரம்மா மெய்சிலிர்த்து புளகாங்கிதம் அடைந்தார். என் எண்ணத்தை நிறைவேற்றவே திருமால் இவ்வாறு அவதாரம் எடுத்திருக்கிறார் என்று மகிழ்ந்து வேதபாராயண ஸ்தோத்திரங்களைச் சொன்னார். அதனால் சந்தோஷம் அடைந்த திருமால் (வராக மூர்த்தி )கர்ஜனை செய்தார். அந்த பிரமாண்ட ஒலி ஜனலோகம், தபோலோகம், சத்யலோகம் மூன்றிலும் கேட்டது. இதைக்கேட்ட தேவர்கள் ,மகிரிஷிகள் மகிழ்ந்தார்கள். பின் திருமால் (வராக மூர்த்தி ) கடலுக்கடியில் அசுரனால் பதுக்கி வைக்கப்பட்ட பூமியை (பூமா தேவியை) மீட்டு எடுக்க பாதாளத்திற்குள் புகுந்தார். அதுசமயம் அசுரன் இரண்யாட்சன் செய்த அட்டூழியங்களைக் கண்டு மூன்று உலகமும் நடுங்கியது. இதற்கு காரணம் பிரம்மாவிடம் யாருக்கும் இல்லாத பராக்கிரமத்தைக் கேட்டுப் பெற்ற வரத்தின் விளைவே ஆகும். இரண்யாட்சன் தேவர்களை ஓட ஓட விரட்டினான். மிகவும் துன்புறுத்தினான். இதனால் தேவர்கள் அனைவரும் காணாமல் போயினர். இவன் அவர்களைத் தேடி பாதாள லோகத்திற்கு செல்ல சமுத்திரத்தில் மூழ்கினான். சமுத்திர ராஜனான வருணனை யுத்தத்திற்கு அழைத்தான். இரண்யாட்சன்னிடம் யுத்தம் செய்து பலன் எதுவும் இல்லை, பிரம்ம வரத்தால் பராக்கிரமம் கொண்ட இவனை ஜெயிக்க முடியாது என்பதை வருணன் உணர்ந்தான். அசுர முதல்வா இரண்யாட்சன்னே! உன் பராக்கிரமத்தை நான் பாராட்டுகிறேன். தினவு எடுக்கும் உன் தோள்களுக்கு சிறந்த விருந்து தர திருமால் ஒருவராலே முடியும். நீ அவரைத் தேடிச் சென்று உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள் என்று தந்திரமாக பதில் கூறினான். வருணன் இவ்வாறு சொன்னதும் இரண்யாட்சன் கதையை சுழற்றிக் கொண்டு கர்ஜனை செய்த வண்ணம் திருமாலைத் தேடி புறப்பட்டான்.

அவன் வைகுண்டத்தை நோக்கிப் போகும் சமயம் அவனை நாரதர் தடுத்தார். அசுர தலைவனே! உன்னிடம் கொண்ட அச்சத்தால் தேவர்கள் எங்கோ ஓடி ஒளிந்தார்களே, நீ இப்போது எங்கே போகிறாய், என்றார். நான் திருமாலைத் தேடி வைகுண்டம் போகிறேன். அங்கே போனால் தான் தினவு எடுக்கும் என் தோள்களுக்குத் தகுந்த தீனி கிடைக்கும் என நினைக்கிறேன்! என்றான். நல்ல காரியம் செய்யப் போகிறாய், ஆனால் நீ தேடிப் போகும் திருமால் வைகுண்டத்தில் இல்லை. பாதாளத்தின் கீழ் அழுந்திக் கிடக்கும் பூமியை வெளிப்படுத்த சென்றிருக்கிறார். அப்படியா? இதோ பாதாள லோகத்திற்குப் போகிறேன் என்று சொல்லி விட்டு பாதாளத்திற்குள் புகுந்தான். அங்கே திருமால் பகவான் வராக மூர்த்தியாக எழுந்தருளி தண்ணீருக்குள் ஆழ்ந்து கிடக்கும் பூமியை மீட்க வராஹமாக உருவெடுத்த காட்சியைக் கண்ட இரண்யாட்சன்

சிரித்தான். பன்றி வடிவில் இருந்த திருமால் கேலி செய்தான். ப திருமால் அவனுடன் யுத்தம் செய்ய ஆயத்தமானார். இரண்டு மலைகள் மோதுவது போல மோதிக் கொண்டனர். யுத்தத்தை நேரில் காண பாதாள லோகத்திற்கு தேவர்களுடன், பிரம்மா வந்து சேர்ந்தார். அண்ட சராசரங்களும் அப்போது கிடுகிடுத்தன. ஹிரண்யாட்சன் தன் கதையை எடுத்து ஹரியை நோக்கி வீசினான். அதை ஹரிபகவான் தன் சக்கராயுதத்தால் தடுத்தார். பின் ஹிரண்யாட்சனின் மாய லீலைகளால் லட்சக்கணக்கான அசுர கணங்கள் ஆயுதங்களோடு தோன்றின. தன் சுதர்சன சக்கரத்தால் அத்தனையையும் அழித்தார் ஹரி பகவான். பிரம்மா அந்நேரம் ஹரியைப் பார்த்து, சந்தியா காலம் நெருங்குவதற்குள் அவனை அழித்து விடுமாறு கூறினார்.

திருமால் அவ்வாறே இரண்யாட்சனின் காதோரம் லேசாக ஒரு தட்டு தட்டினார். அவன் விழிகள் பிதுங்கி மரம் போலச் சாய்ந்தான். அந்நேரம் தேவர்கள் திருமாலைப் போற்றி துதித்துப் பாடினர். பாதாளத்தில் அழுந்து கிடந்த

பூமியை கடலில் இருந்து மீட்க வராகமூர்த்திக்கு உதவியவள் சாட்ஷாத் ஶ்ரீ வராஹி தேவி தான். வராஹ முகமும், பெண்ணின் உடலும், இவளுக்கும் மூன்று கண்கள் உண்டு. இது சிவனின் அம்சமாகும். அம்பிகையின் அம்சமாக பிறந்ததால், இவள் சிவன்,ஹரி,சக்தி என்ற மூன்று அம்சங்களைக் கொண்டவளாவாள். எதையும் அடக்க வல்லவள். மற்றும் எட்டு திருக்கரங்களுடன் திகழ்பவள் தன் திருக்கரங்களில் சங்கு, சக்கரம், கட்கம் (கத்தி), உலக்கை, கலப்பை, உடுக்கை மற்றும் அபய - வரத முத்திரைகளுடன் காட்சி தருபவள். நீல நிற மேனியளான இந்த தேவி சிவப்பு நிற ஆடை உடுத்தி, சந்திர கலை தரித்த நவரத்தினக் கிரீடம் அணிந்தவளாக சிம்ம வாகனத்தில் வீற்றிருப்பவள்.

வராகமூர்த்திக்கு ( பன்றி அவதாரம் ) பன்றிக்கு இயல்பிலே வானை நோக்கும் சக்தி கிடையாது . எப்போதும் அது பூமியை பார்த்தே நடக்கும் ஒரு பிராணி. ஆனால் வராஹ அவதாரம் எடுத்த பெருமானுக்கோ பூமியை கடலில் இருந்து மீட்டு தன் மூக்கி நுனியில் (அதாவது பூமியை ஒரு தூக்கு தூக்கி தலையை உயர்த்தி) வைக்க வேண்டும். ஆனால் கொண்ட உருவத்தின் இயல்பை (இயற்கையை) மாற்ற முடியாதல்லவா. ஆக அந்த உந்துதலுக்கு (உயர்த்துதலுக்கு) உதவியவள் தான் ஶ்ரீ வராஹி தேவி. ஆக அவள் உந்துதலுக்கு உரிய தெய்வம். ஶ்ரீ வராஹி தேவி வழிபாட்டு சங்ககாலம் முதலே சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. தேவி போர் தெய்வம் மட்டுமல்ல அவள் தன்னுடைய கைகளில் ஏர் கலப்பையை தாங்கியுள்ளார் விவசாயம், வீடு, நிலம் தொடர்பானவற்றில் வெற்றியை அருள்பவள். பயிர்களை விளைவிப்பதும், பலன்தருவதும் கடமையாக கொண்டவள்.

வாழ்வில் ஏற்படக்கூடிய எதிர்ப்புகளை நீக்குபவள். இல்லம் எனும் வீட்டில் என்றும் தானியங்கள் நிறைந்திருக்கச் செய்பவள். மிக விரைவில் பலன் அளிக்கக் கூடியவள்.

ஶ்ரீ வராஹி தேவி மனதார நினைத்தாலே சடுதியில் மாற்றம் தருவாள்...அறியாமைக் கடலில் மூழ்கி கிடக்கும் ஞானத்தை வெளிக்கொண்டு வந்து அடியவர்களின் வாழ்க்கையை மேன்மை பெறச்செய்கிறாள்.

வார்த்தாலி என்று அழைக்கப்படக்கூடிய வராஹி, அளப்பரிய சக்தி கொண்டவள். வேண்டுவோருக்கு வேண்டுவனவற்றை உடனடியாக அருளுபவள்.

தீராத நோயால் அவதிப்படுபவர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும்,

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் திங்கட்கிழமையிலும்,

வழக்கு, பூமி சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்கள் செவ்வாய்க் கிழமையிலும்,

கடன் தொல்லைகளில் அவதிப்படுபவர்கள் புதன்கிழமையிலும் வழிபட நலன் கிடைக்கும்.

குழந்தைவரம், கல்வியில் தேர்ச்சி பெற்று வெற்றி பெற வியாழக்கிழமையிலும் வழிபடலாம்.

வெள்ளிக்கிழமை அன்று வழிபட்டால் பில்லி, சூனியம், ஏவல், தோஷம் நீங்கும்.

சனிக்கிழமையன்று வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடி வெற்றிபெறும்.

மாதத்தில் வருகிற வளர்பிறை, தேய்பிறை, பஞ்சமி திதியிலும் விரதம் இருந்து வழிபட்டால் நல்லது.

வராஹி அம்மனை 16 முறை வலம் வந்து நெய்தீபம் ஏற்றி ஒருமனதோடு தர்ம சிந்தனையில் வழிபட்டால் எல்லா வகையிலும் வெற்றி கிட்டும்.

ஸ்ரீ வராஹி தேவி புகழை அடுக்கி கொண்டே போகலாம்....